# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 10.08.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல் பக்கராவின் 187 வது வசனத்தை ஓதினார்கள்.**

*பொருள்: என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றி கேட்டால், நான் அருகில் இருக்கிறேன்; பிரார்த்தனை செய்கிறவர் என்னை அழைக்கின்றபோது, நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே, அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள். (2:187)*

ரமலான் மாதம் வந்தது; இரண்டு அஷ்ராக்கள் அதாவது, இருபது நாட்கள் கழிந்து விட்டன. எவ்வளவு வேகமாக இந்த இருபது நாட்கள் ஓடின என்பதைப் பற்றி உணர முடிவதில்லை. தற்போது கடைசி அஷ்ரா அதாவது கடைசி பத்து நாட்கள் தொடங்கி விட்டன. பல்வேறு கடிதங்கள் எனக்கு வருகின்றன. அதில் ரமலான் தொடர்பாகவும், அதிலிருந்து பலன் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் துஆவிற்காகவும் எழுதப்பட்டிருந்தது. மக்கள் சந்திக்கும் போதும் இதனைப் பற்றி கூறுகின்றார்கள். ஒரு மூஃமினுக்கு கண்டிப்பாக நாம், ரமலானிலிருந்து அதிக அளவு பலன் பெறக்கூடிய மக்களாக இருக்க வேண்டும் என்ற சிந்தனை இருக்க வேண்டும்.

ஓர் அஹ்மதிக்கு இந்த சிந்தனை இல்லையென்றால், பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதன் நோக்கமும் மரணித்து விடுகின்றது. நம்மிடம் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதற்காகத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வருகை தந்தார்கள். எது எப்படிப்பட்ட புரட்சி என்றால், அடியானை இறைவனுடன் இணைக்கக் கூடியதாகும். அது தமது சிந்தனைகளையும், எண்ணங்களையும் நாம் இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்பதன் பக்கம் இழுத்துச் செல்லக் கூடியதாகும். அது நமக்கு இதன் பக்கம் கவனம் செலுத்தக் கூடியதாகும். அதாவது, நாம் நமது ஈமானை உறுதிப்படுத்தியவாறு அதன் உயர் தரத்தை நிலைநாட்ட வேண்டும். அது நமக்கு ஆன்மீக நிலையின் முன்னேற்றத்துடன் அடியானுக்குரிய உரிமையை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அது நமது கவனத்தை எப்போதும் இதன் பக்கம் திருப்பக் கூடியதாகும். அதாவது நாம் நமது நிலையில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு எப்போதும் நம்மை ஆராய வேண்டும். மேலும் அது இதன் பக்கம் கவனம் கூடியதாகும்.

இந்த விசயங்களை அடைவதற்கு மேற்கூறப்பட்ட விசயங்களைப் பெறுவதற்கு நாம் எந்த வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த விசயங்கள் இருந்தால் தான் நாம் உண்மையில் இக்காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டதற்கான உரிமையை செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்தக்கூடிய மக்களாக அழைக்கப்படுவோம்.

இது இறைவனின் அருளாகும். அவன் ஒவ்வொரு காலத்திலும் பல்வேறு வழிகளில் அந்த நன்மையினைப் பெறுவதற்குரிய சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுக்கின்றான். அவை மேலே கூறப்பட்டுள்ளது. மேலும் நானும் சிலவற்றை கூறியுள்ளேன். அருளுக்குரிய ரமலான் இந்த சந்தர்ப்பங்களில் மிகவும் முக்கியமான, மிகப்பெரிய, அருளுக்குரிய சந்தர்ப்பமாகும். நிச்சயமாக இது நமது அதிர்ஷ்டமாகும். அதாவது ரமலான் மாதத்தில் தன்னிடத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதற்கு, நம்மிடத்தில் ஒரு விருப்பம் ஏற்பட்டு அதற்காக முயற்சியும் செய்ய வேண்டும். ஆனால் நமது முயற்சிகள் எப்போது முழுமையடையும் என்றால், எப்போது நமக்கு பலன் தரும் என்றால் நாம் அதனை அடைவதற்கு எதனை அல்லாஹ் கூறியிருக்கின்றானோ அதே வழிகளை மேற்கொள்ள வேண்டும். நாம் நமது விருப்பத்திற்கேற்ப நம்மிடம் உண்டாக்கிய வழிகளைக் கொண்டு ரமலானிலிருந்து பலன் பெற முடியாது.

நான் ஏற்கனவே இதனை குத்பாவில் கூறியிருந்தேன். அதாவது நோன்பு வைத்து அல்லது வெளிப்படையான தொழுகைகளை மட்டும் மேற்கொண்டு அல்லாஹ்வின் நெருக்கத்தை நாம் பெற முடியாது.

நிச்சயமாக இந்த வெளிப்படையான இந்த அமல்களும் தேவைதான். அசைவுகளும், அமைதிகளும் தேவை தான். நோன்பு வைக்க ஸஹர் உண்பதும், நோன்பு திறப்பதும் அவசியமாகும். நிச்சயமாக இவைகள் இல்லாமல் இறைவன் வரை செல்ல முடியாது. ஏனென்றால், இவற்றை செய்வதற்கு இவ்வாறு செய்வதற்கு இறைவன்தான் கட்டளையிட்டுள்ளான். இவை கண்டிப்பாக கடமைகளைச் சார்ந்தவைகள் ஆகும். இந்த வெளிப்படையான அசைவுகள், அமல்கள் போன்றவற்றை எவர் செய்யமாட்டாரோ அவர் இறைவனது கட்டளைகளை மறுப்பவர் ஆவார். நிச்சயமாக அந்த மக்கள் தவற்றில் இருக்கிறார்கள். அதாவது, திக்ர் கூட்டங்களை ஏற்படுத்தி, அல்லது சிலவற்றைக் கூறி விட்டு இறைவன் கிடைத்து விடுவான் என்றும், அல்லது அடியானின் உரிமை நிறைவேறி விட்டது அல்லது இபாதத்தின் கடமை நிறைவேறி விட்டது என கூறுபவர்கள் தவற்றில் இருக்கின்றார்கள்.

இவை அனைத்தையும் செய்வதற்கு கண்டிப்பாக ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தனது சுன்னத்தின் மூலம் நிலைநாட்டியதை கடைபிடிப்பது அவசியமாகும். மேலும் தனது உம்மத்திற்கு, எவ்வாறு அமல் செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்களோ அவ்வாறே செய்ய வேண்டும். மேலும் இந்த வெளிப்படையான அமல்கள் மற்றும் தனது செயல்களுடன் தனது உள்ளத்தின் நிலையில் தூய மாற்றத்தினை ஏற்படுத்தி, இதன் உயர் தரத்தை நிலைநாட்டுவது அவசியமாகும். இதற்கும் கட்டளையுள்ளது. இது மிக முக்கியமான கட்டளையாகும். இதனை பெறுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். இதனைப் பெறுவதற்கு தன்னிடத்தில் ஒரு ஆர்வத்தினை உண்டாக்க வேண்டும்.

நான் ஓதிய இந்த வசனத்தில் இறைவன் நமக்கு தனது அன்பினைப் பெறுவதற்குரிய வழிகளைக் கூறியுள்ளான். எந்த தரத்தை அடைவதன் மூலம் மனிதன் ஒரு உண்மையான மூஃமினாக, இறைவனது நெருக்கத்தைப் பெறக்கூடியவனாக ஆக முடியுமோ அந்த இடத்தை இதில் கூறியுள்ளார்கள். மேலும் அவரே ரமலானின் நோன்புகளிலிருந்து பலன்பெறக் கூடியவராவார். இந்த வசனத்தில் கவனம் செலுத்தினால் அங்கு அல்லாஹ்வுடைய அன்பு தனது அடியானின் மீது பிரகாசிக்கும். மேலும் அந்த ஹதீஸின் ஞானம் இன்னும் அதிகமாகும். அதில் இறைவன் கூறுகின்றான்: எவன் என்னை நோக்கி ஒரு ஜாண் அளவு வருவாரோ, நான் அவரை நோக்கி ஒரு முழம் அளவு வருவேன். அவன் என்னை நோக்கி ஒரு கை அளவு வந்தால், நான் அவனை நோக்கி இரண்டு கை அளவு செல்வேன். அவன் என்னிடம் நடந்து வந்தால், நான் அவனை நோக்கி ஓடி வருவேன்.

ஆக, இறைவன் தனது அடியாருடன் இவ்வாறுதான் அன்பு கொள்கின்றான். உண்மையில் அடியாரின் உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்யக் கூடிய தனது அந்த அடியாருடன், மேலும் அல்லாஹ்வின் அடியார் என்று அழைக்கப்படுபவர்களுடன் இணைய விரும்புபவருடன் இவ்வாறுதான் நடந்து கொள்கின்றான். ஏற்கனவே நான் கூறியது போன்று இந்த வசனத்திலிருந்து குறிப்பாக இபாதி எனது அடியார் என்ற வார்த்தையிலிருந்து இறைவனுடைய எந்த அன்பு வெளிப்படுகிறதோ அதிலிருந்து இந்த விசயமும் தெரிய வருகின்றது. அதாவது அல்லாஹ் ஒவ்வொரு மனிதனுடைய கேள்விக்கும் நான் அருகில் இருக்கிறேன் என பதில் அளிக்கவில்லை. நடந்து இறைவன் வரை செல்வது ஒரு பக்கம் இருக்கட்டும். ஒரு ஜாண் அளவு கூட இறைவன் பக்கம் முன்னேற விரும்பாதவர்கள் இபாதி – என் அடியார்கள் என்ற கூட்டத்திற்குள் வரமாட்டார்கள். அல்லாஹ் அனைத்து மனிதர்களையும் நோக்கி இவ்வாறு கூறவில்லை அல்லது மனிதன் என்ற வார்த்தையை உபயோகிக்கவில்லை.

மாறாக அந்த அடியானை நோக்கி கூறுகின்றான். எவர் அடியான் ஆவதற்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்துவாரோ அவரை நோக்கி கூறுகின்றான். இதற்காக அடியான் முயற்சி செய்கின்றான். அடியான் ஆவதற்குரிய உரிமை எவ்வாறு நிறைவேறும்? அதற்காக நாம் இறைவனுடைய அந்த கட்டளையின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதில் இறைவன் நமது பிறப்பின் நோக்கத்தை கண்முன் நிறுத்துவதன் பக்கம் கவனமூட்டியுள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான்: தனது பிறப்பின் நோக்கத்தை அறியக்கூடியவர்களே எனது அடியார்கள் ஆவர். வெறும் அறியக்கூடியவர் மட்டும் கிடையாது. அதனை அடைவதற்கு இரவும் பகலும் முயற்சிப்பவர் ஆவர். ஆக, இறைவன் கூறுகின்றான்: எனது அடியார் இதன் பக்கம் கவனம் செலுத்துபவரே ஆவார்.

இதனைப் பற்றி கூறுகின்றான்: மேலும் நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன்.

எனவே, இறைவனுடைய அடியான் ஆவதற்கு அளவுகோலாக அல்லாஹ் தனது இபாதத்துகளின் தரத்தை உயர்த்திக் கொண்டே செல்வதை வைத்திருக்கின்றான். பிறப்பின் நோக்கத்தை வெறும் ரமலானில் மட்டும் நினைவில் கொள்ள வேண்டும். மற்ற நாட்களில் இதன் பக்கம் கவனம் இருக்கக் கூடாது என்று கூறவில்லை. உண்மையான அடியார் பிறப்பின் நோக்கத்தை எப்போதும் கண்முன் நிறுத்த வேண்டும் அல்லது உண்மையான அடியராக ஆக விரும்புபவர் எந்நேரமும் பிறப்பின் நோக்கத்தை கண்முன் நிறுத்த வேண்டும். நோன்பின் அருளால் ஆன்மீகத்தில் அதிக அளவு முன்னேற்றம் ஏற்படுகிறது.

மேலும் இறைவன் கூறுகின்றான்: எனது நெருக்கத்தின் தேடல் முன்பை விட அதிகம் ஏற்படுகிறது. அப்போது என்னைப் பற்றி கேட்கக்கூடியவர்களுக்கு, கூறுவீராக! நான் ரமலானில் இன்னும் அதிகமாக அருகாமையில் வந்து விட்டேன். நான் ஏற்கனவே இதனை அதாவது இந்த ஹதீஸை குத்பாவில் கூறியிருந்தேன். யாரெல்லாம் இதன் பக்கம் முன்பே கவனம் செலுத்தினார்களோ அவர்களுக்கு சொர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்பட்டு விடும்.

அல்லாஹ் கூறுகின்றான்: எனது அடியாராவதற்கு முன்பே கவனம் செலுத்தக் கூடியவர்களிடம் கூறுங்கள். இந்த நாட்களில் குறிப்பாக நான் அடியாரின் அருகில் இருக்கின்றேன். எனவே, அல்லாஹ் தனது அடியாரின் அருகில் இருக்கின்றான். மாறாக, உயிர்நாடியை விட மிக அருகில் இருக்கின்றான். சாதாரண நாட்களிலும் அடிமையின் உரிமைகளை நிறைவேற்ற முயற்சி செய்யக் கூடியவர்களுக்காக இரவில் தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழக்கூடியவர்களுக்காக அல்லாஹ் கீழ்வானம் வரை வருகின்றான்.

ரமலானில் இறைவனது அருள் மற்றும் கருணை மேலும் அதிகமாகிறது. எனவே, இதிலிருந்து முழுமையாக பலன்பெறக் கூடியவர்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவர். மேலும் ரமலானில் இறைவனுடைய அடியானாவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் அல்லது மேற்கொண்டு வருகின்ற முயற்சிகள் நோன்பின் காரணமாக காலையில் சுபுஹ் தொழுகையின் பக்கமும், தஹஜ்ஜுத் தொழுகையின் பக்கமும் கவனம் ஏற்பட்டுள்ளது. இறைவனது நெருக்கத்தின் காட்சியினை காண்பதற்காக முயற்சி செய்யப்பட்டது அல்லது இந்த நாட்களில் அக்காட்சியினைக் கண்டீர்கள். மேலும் தொழுகையில் ஒழுங்குமுறை ஏற்பட்டுள்ளது. திருக்குர்ஆன் ஓதுவதற்கும், அதனைப் புரிவதற்கும் கவனம் ஏற்பட்டுள்ளது. தர்ஸ்களில் உட்கார்ந்து அதனை கேட்பதற்கும் கவனம் ஏற்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து செய்து வாருங்கள்; இதற்காக உறுதி எடுங்கள்.

தனது அடியானின் உள்ளத்தின் நிலையை அறியக்கூடிய இறைவன் தனது அன்பான நபி (ஸல்) அவர்களிடம் கூறுகின்றான்:

எனது இந்த அடியார்களிடம் கூறுவீராக! அடிமையின் உரிமைகளை நிறைவேற்றும் இந்த முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வருவேன் என்ற உறுதிமொழியுடன் வேண்டுங்கள். அவ்வாறு செய்தால் நான் ரமலான் மட்டுமல்ல; எப்போதும் அருகில் இருக்கின்றேன்; அருகில் இருப்பேன். நீங்கள் வெறும் தற்காலிகமாக இந்த குறிக்கோளின் பக்கம் கவனம் செலுத்தினால் உங்களது வாழ்வு வீணானதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

அதாவது அவன் அவனைப் பற்றிய அறிவையும், நெருக்கத்தையும் பெற வேண்டும் என்பதற்காகத்தான் படைத்திருக்கின்றான். அல்லாஹ், நாம் ஜின்னையும், மனிதனையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன் என்று கூறுகிறான்.

கூறுகின்றார்கள்: எவர் இந்த உண்மையான குறிக்கோளை கண்முன் நிறுத்தாமல், இரவும், பகலும் உலகைப் பெறுவதற்காக ஈடுப்பட்டிருப்பவர், இன்ன நிலத்தை வாங்க வேண்டும். இன்ன வீட்டை கட்ட வேண்டும். இன்ன சொத்தை அபகரிக்க வேண்டும். இப்படிப்பட்ட மனிதருக்கு இறைவன் சிறிது காலம் வாய்ப்பினை வழங்கி விட்டு, திரும்ப அழைத்துக் கொள்ளும் போது அவருடன் எவ்வாறு பரிமாறப்படும்?

கூறுகின்றார்கள்: இறைவனது நெருக்கத்தைப் பெறுவதற்காக ஒரு வேதனை இருக்க வேண்டும். இதன் மூலம் அவனது பார்வையில் கண்ணியமிக்க பொருளாகக் கருதப்படுவான். இந்த வேதனை அவனது உள்ளத்தில் இல்லையென்றால், வெறும் உலகம், அதிலுள்ளவைகளைப் பற்றிய வேதனை மட்டும் இருந்தால், இறுதியில் சிறிதளவு வாய்ப்பு கிடைக்கப் பெற்று அவன் அழிந்து விடுவான்.

இதற்கு உலகப் பணிகளைச் செய்யக்கூடாது என்ற அர்த்தம் கிடையாது.

ஓரிடத்தில் அன்னார் இவ்வாறும் கூறியுள்ளார்கள்: அதாவது எவரிடம் நிலம் இருந்து அதில் அவர் பணி செய்யவில்லையென்றால், ஒருவரிடம் வியாபாரம் இருந்தும் அவர் அதற்காக முயற்சி செய்யவில்லையென்றால் அவர் அதன் உரிமையை நிறைவேற்றாதவர் ஆவார்.

எனவே உலகப் பணிகளும், வியாபாரங்களும் இருக்க வேண்டும். அதனுடன் இறைவன் பக்கமும் கவனம் இருக்க வேண்டும். மேலும் மனிதனுக்கு இறைவன் வகுத்துள்ள பிறப்பின் குறிக்கோளை ஒருபோதும் மறக்கக் கூடாது.

கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு ஒரு வேதனை இருக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதுபோன்று, தனது பிறப்பின் நோக்கத்தை அறிவதற்கு, அல்லாஹ் பற்றிய அறிவு மற்றும் அவனது நெருக்கத்தைப் பெறுவது அவசியமாகும். இந்த நெருக்கம் எப்போது கிடைக்கப் பெறும் என்றால், மனிதனிடம் அதனைப் பெறுவதற்கு வேதனை இருக்கும்போது தான் கிடைக்கும். இதற்காக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: எனது அடியார்களே! இந்த வேதனையினைப் பெறுவதற்கு முயற்சி செய்கிறீர்களா? உங்களது விருப்பம், விருப்பம் என்பதிலிருந்து வெளியேறி அமல் என்ற ஆடையை எப்போது அணியும் என்றால் உங்களது ஈமான் முன்னேற்ற பாதைகளைக் கடந்து செல்லும் போதுதான் நடைபெறும். நீங்கள் எப்போதும் எனது ஒவ்வொரு விசயத்திலும் செய்யத் தயாராகி விட்டேன் என்று கூறும்போதுதான், குறைந்த அளவு நல்ல எண்ணத்துடன் இதற்காக முயற்சிகள் மேற்கொள்ளும்போது தான் நடைபெறும்.

அடியார் ஆவதற்கு இபாதத்துகளுடன் மற்ற கட்டளைகளின்படி அமல் செய்வதும் அவசியமாகம். மனிதன் பலவீனமானவன் ஆவான். மனிதன் என்ற ரீதியில் உயர்வு, தாழ்வு உண்டாகத்தான் செய்யும். ஆனால் இந்த உயர்வு, தாழ்வின் உணர்வு உடனே ஏற்பட வேண்டும். எந்த அமலில் பலவீனங்களை உணர்கிறீர்களோ அதனை சரிப்படுத்த வேண்டும். தவ்பா, இஸ்திக்ஃபாரின் பக்கம் கவனம் செலுத்தியவாறு உடனேயே அந்த பலவீனங்களை களைவதற்கு முயற்சிகள் ஏற்படுத்த வேண்டும்.

இந்த ரமலானில் நன்மையைப் பெறுவதற்காக முயற்சிகள் செய்து விட்டு பிறகு வருடம் முழுவதும் உலகத்தைப் பெறுவதற்கு கவனம் செலுத்தலாம் அல்லது உலகப் பணிகளில் மூழ்கி, பிறப்பின் நோக்கத்தை மனிததன் மறந்து விடலாம் என்பதன்று. அடுத்த ரமலான் வந்தால் பிறகு அடியான் ஆவதற்கு முயற்சி செய்வோம் என நினைக்கக் கூடாது. அதற்குப் பிறகு இறைவனுக்குரிய உரிமை மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்துவோம் என்றிருக்கக் கூடாது.

அல்லாஹ் நோன்புடன் இந்தக் கட்டளையையும் வைத்துள்ளான். அதாவது எனது விசயங்களுக்கு லெப்பைக் என்று கூறுங்கள். தனது ஈமானை வலுவடையச் செய்யுங்கள். அவ்வாறு செய்தால் நல்லது. அடுத்த ரமலான் வந்தால் நாம் முயற்சி செய்வோம் என்றிருக்கக் கூடாது. அடுத்த ரமலான் வரும்வரை இந்த நன்மைகளைத் தொடரச் செய்ய வேண்டும் என்ற கவனம் இருந்தால் நமக்கு நன்மை கிடைக்கும். இல்லையென்றால் இதற்கு எந்த பலனும் இல்லை. இந்த ரமலானில் நன்மைகளைச் செய்து விட்டு பிறகு அடுத்த ரமலான் வந்தால் செய்வோம் என்ற சிந்தனை இருந்தால், நாம் நமது குறிக்கோளை அடைவதற்கு முயற்சி எதுவும் செய்யவில்லை. மேலும் அல்லாஹ் எந்த நல்லடியார்களை அப்து எனது அடியார் என்று கூறி அழைத்துள்ளானோ அந்தக் கூட்டத்தில் இணையவில்லை என்பதாகும்.

ஆக, அப்து அடியார் ஆவதற்குரிய அமல், சில நாட்கள் அல்லது ஒரு மாதத்தின் செயல் கிடையாது. மாறாக அடியார் ஆவதற்கு தொடர்ந்து முயற்சிகள் செய்வது அவசியமாகும். ரமலானில் ஒரு மூஃமின் அடியாருக்கு இதன் பக்கம் அதிக கவனம் இருக்கும். எனவே இதில் குறிப்பாக நோன்புடன் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளான். தனது சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் ஏற்படும் போது இதில் முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்ல வேண்டும். இந்த முன்னேற்றத்தை எவ்வாறு அடைய முடியும்? தனது படைப்பின் நோக்கத்தைப் பெறுவதற்கு எவ்வாறு முயற்சி செய்ய வேண்டும்?

**இதனைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்:**

அல்லாஹ்வின் நிறத்தை மேற்கொள்ளுங்கள். நிறத்தில் அல்லாஹ்வை விட சிறந்தவர் யாராக இருக்க முடியும். மேலும் நாம் அவனையே வணங்குபவர்களாவோம்.

ஆக, பிறப்பின் நோக்கத்தை அடைவதற்கு அல்லாஹ்வுடைய நிறத்தை மேற்கொள்வதும், அவனது பண்புகளை தன்னகத்தே உண்டாக்குவதற்கு முயற்சி செய்வதும் அவசியமாகும். அப்போதுதான் மனிதன் உண்மையான அடியானாக ஆக முடியும். உலகத் தொடர்புகளில் நாம் பார்க்கின்றோம். அன்பிற்குரியவர்கள் ஒருபக்கம் உள்ளனர். இரத்த சொந்தங்கள் ஒருபுறம் உள்ளனர். எஜமானன், அடிமையின் தொடர்பிலும், அடிமை தனது எஜமானுடைய விருப்பம் மற்றும் விருப்பமின்மையை தன் மீதும் ஏற்படுத்திக் கொள்கிறான். அல்லது முயற்சி செய்கின்றான்.

இந்தத் தொடர்பில் சில சமயங்களில் காட்டுதல் மற்றும் பொய்யும் ஏற்பட்டு விடுகின்றது. பலனையும் உறுதியாக் கூற முடியாது. எவ்வாறென்றால் ஒரு கதை உள்ளது. பல்வேறு கதைகள் உள்ளன.

ஒரு அரசனின் சேவகன் இருந்தான். அரசனுக்கு ஓரிடத்திலிருந்து கத்தரிக்காய் அன்பளிப்பாக வந்தது. அதனை மிகவும் புகழ்ந்து பேசினார். அரசர் அதனை தினமும் சாப்பிட ஆரம்பித்தார். சேவகனும் அதனை அதிக அளவு புகழ்ந்து வந்தார். அளவுக்கு அதிகமாக அதனை புகழ்ந்து எல்லை மீறி விட்டார். இறுதியில் ஒவ்வொரு நேரமும் இதனை சாப்பிட்டு வந்ததால் அரசர் உடல்நிலை குன்றிப்போனார். அரசர் இதனை இகழ ஆரம்பித்ததும் சேவகனும் இகழ ஆரம்பித்தான். அரசர், நீ முதலில் புகழ்ந்தாய். இப்போது இதனை ஏன் இகழ்கிறார் என்றார். அந்த சேவகன், எஜமானனே! நான் உங்களது அடிமை ஆவேன். கத்தரிக்காயின் அடிமை கிடையாது என்று கூறினார்.

ஆக, இது நிறத்தை மேற்கொள்வதாகாது. அவன் தனது எஜமான் கூறுவதை தானும் கூற வேண்டும் என்ற நிறத்தை அவர் மேற்கொண்டார். ஆனால் அல்லாஹ்வின் நிறம் எவ்வாறானதென்றால் மனிதன் அதனை மேற்கொள்ளும் போது உலகம் மற்றும் மறுமை இரண்டையும் பெற்று விடுவான். வானம், பூமி ஆகியவற்றின் இறைவனாகிய அல்லாஹ்வின் நிறத்தினை மேற்கொள்வது என்பது, உலகம் மற்றும் மறுமையை அழகுபடுத்திக் கொண்டிருப்பதாகும்.

அல்லாஹ்வின் பண்புகளை மேற்கொண்டு ஓர் அடியார் இறைவனது நெருக்கத்தைப் பெறுகிறார். இந்த நிறத்தைத்தான் ஒரு மூஃமின் மேற்கொள்கிறார். தனது பிறப்பின் உண்மையான நோக்கத்தைப் பெற்று விடுகிறான். எனவே, அல்லாஹ்வின் அடியார் ஆவதற்கு அல்லாஹ்வின் பண்பின் பிரதிபலிப்பாக விளங்குவதற்கு ஒரு மூஃமின் முயற்சி செய்ய வேண்டும். இறைவனுக்கு விருப்பமான விசயங்களையும் அமல்களையும் செய்ய முயற்சி செய்ய வேண்டும். இறைவனுக்கு விருப்பமில்லாத விசயங்களிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். அப்போதுதான் சரியான முறையில் அல்லாஹ்வின் அடியானாக மனிதன் ஆக முடியும்.

இறைவன் இவ்வாறு கூறியிருக்கும் போது, அதாவது அவனது நிறத்தை மேற்கொள்ள வேண்டும். அவனது பண்பின் பிரதிபலிப்பாகத் திகழ வேண்டும். இதன் பொருள் அல்லாஹ் மனிதனுக்கு இந்தப் பண்புகளை மேற்கொள்ளக்கூடிய தகுதியை வழங்கி இருக்கின்றான் என்பதாகும். தனது வட்டத்தில்இந்த பண்புகளை தன்னிடம் உருவாக்க முடியும். மனிதன் தனது வட்டத்தில் மாலிக்கியத்தின் நிறத்தை அதாவது எஜமானன் என்ற நிறத்தை மேற்கொள்ள முடியும். ரஹ்மானிய்யத்தின் நிறத்தையும் மேற்கொள்ள முடியும். ரஹீமிய்யத்தின் நிறத்தையும் மேற்கொள்ள முடியும். ருபூபிய்யத் – படைத்துப் பரிபாலிப்பவன் என்ற நிறத்தையும் மேற்கொள்ள முடியும். சத்தார் – குறைகளை மறைப்பவன் என்ற நிறத்தையும் மேற்கொள்ள முடியும். வஹ்ஹாப் – வழங்குபவன் என்ற நிறத்தையும் மேற்கொள்ள முடியும்.

மாறாக சதாரண மனிதனின் வாழ்வில் இந்த விசயங்கள் சில சமயங்களில் வெளிப்படவும் செய்யும். பலர் உள்ளனர். இந்தப் பண்புகளை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் அவர்கள் இறைவனது நிறத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் அதனை செய்வதில்லை. ஆனால் உண்மையான மூஃமின், இறைவனது விருப்பம் மற்றும் அன்பினை வேண்டக் கூடிய மூஃமினின் அடையாளம் என்னவென்றால், இந்த பண்புகளின் வெளிப்பாடு

ஆகும். ஏனென்றால் அல்லாஹ்வின் அன்பினை ஈர்ப்பதற்கு இந்த பண்புகளை வெளிப்படுத்துவது அவசியமாகும். அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்கு இந்தப் பண்புகளின் வெளிப்பாடு அவசியமாகும். மனித இனத்தை தீமையிலிருந்து காப்பாற்றுவதற்கு இந்தப் பண்புகளின் வெளிப்பாடு அவசியமாகும். தனது படைப்பின் நோக்கத்தை அடைவதற்கு இந்த பண்புகளின் வெளிப்பாடு அவசியமாகும்.

ஆக, இந்த நிறத்தை மேற்கொள்வது, பிறகு இதனை வெளிப்படுத்துவது நன்மையாக ஆகி விடும். அல்லாஹ்வின் அன்பினை ஈர்க்கக் கூடியவர்களாக ஆகி விடுவார்கள். அல்லாஹ்வின் நிறத்தை மேற்கொள்ளுங்கள் என கட்டளையிட்ட பிறகு கூறுகின்றார்கள். மூஃமின்களே! எனது அடியார்களே! வ நஹ்னுலகூ ஆபிதூன் – அதாவது நாங்கள் அவனை வணங்கங்கூடியவர்களாவோம் என்பதை அறிவிப்பு செய்யுங்கள்.

அல்லாஹ்வின் பண்பினை மேற்கொள்வது, அவனது நிறத்தை மேற்கொள்வது நாம் அவனது அடியார் என்பதனாலேயாகும். நமக்கு அவனது விருப்பம் தேவையாகும். நமக்கு அவனது அடியானாக இருப்பது மிகவும் உயர்ந்ததாகும். அவனை வணங்கக் கூடியவர்களாவோம். அவனது கட்டளைகளுக்கேற்ப தனது வாழ்வை கழிக்கக் கூடியவர்கள் ஆவோம். அவ்வாறே கழிக்கவும் விரும்புகின்றோம்.

ஆக, இவ்வாறு இந்த வாழ்வை ஒரு மாதம் மட்டும் கழிப்பது கூடாது. மாறாக நமது வாழ்வின் ஒவ்வொரு நொடியும் அவனது கட்டளைக்கேற்ப கழிக்க வேண்டும். நாம் இந்த விசயத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். தன்னிடத்தில் தூய மாற்றத்தை ஏற்படுத்தி நாம் இந்த ரமலானை கடக்க வேண்டும். இன்ஷா அல்லாஹ். அல்லாஹ்வின் பண்புகளை மேற்கொண்டவாறு நாம் இந்த ரமலானை கடக்க வேண்டும். இன்ஷா அல்லாஹ். பிறகு இறைவனின் இபாதத்துகளின் உரிமைகளை நிறைவேற்றியவாறு நாம் இந்த ரமலானை கடக்க வேண்டும். இன்ஷா அல்லாஹ். மேலும் இந்த அனைத்து அமல்களையும் அடுத்த ரமலான் வரை எடுத்துச் செல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இவை அனைத்தும் நடந்தால் இன்னி கரீப் – நான் அருகில் இருக்கிறேன் என்ற நற்செய்தியைக் கேட்கக் கூடியவர்களாக நாம் ஆவோம். நான் பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன் என்பதன் தோற்றத்தை காணக்கூடியவர்களாக நாம் ஆவோம்.

இந்த தரத்தை அடைவதற்கு நாம் முயற்சியும் மேற்கொள்ள வேண்டும். துஆவும் செய்ய வேண்டும். நமது துஆவின் மையப்புள்ளி உலக ஆசைகளாக மட்டும் இருக்கக் கூடாது. மாறாக, இறைவனின் பண்புகளை மேற்கொண்டவாறு அடியாருக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும். மேலும் இறைவன் எந்த நன்மைகளை செய்யுமாறு கட்டளையிட்டுள்ளானோ அதனை செய்வதன் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும். அல்லாஹ் ஃபல் யஸ்தஜ்பூலி – எனது கட்டளைக்கு கட்டுப்பட வேண்டும் என்பதன் மூலம் ஒரு மூஃமினுடைய கவனம் இந்த கட்டளையின் பக்கமும் திருப்பப்படுகிறது. மேலும் ஒரு மூஃமினுக்கு தனது பொறுப்புகளைப் புரிவதன் பக்கம் வலியுறுத்துகிறது. அப்போதுதான் முழுமையான உண்மையான மூஃமினாக ஆக முடியும்.

தற்போது நான், அல்லாஹ்வின் கட்டளைக்கு லெப்பைக் என்று கூறக்கூடியவர்கள் ஆவோம். அல்லாஹ்வின் உரிமைகளையும் நிறைவேற்றுவதன் பொறுப்புகள யாவை? என்பதைப் பற்றி சில விசயங்களை எடுத்துரைப்பேன். உதாரணமாக, அல்லாஹ் கூறுகின்றான்:

அல்லாஹ்வின உண்மையான அடியார்கள் யார் என்றால் அவர்கள் மக்களிடம் நன்மையானவற்றை ஏவுவார்கள். தீமையினை விட்டும் தடுப்பார்கள். தெளிவான விசயமாவது, இதன் மீது உண்மையில் அமல் செய்யக் கூடியவர்கள் யாரென்றால் தானும் நன்மையினை செய்யக் கூடியவர்களாக இருப்பவர்களும், மேலும் தீமையிலிருந்து தவிர்ந்திருக்கக் கூடியவர்களுமே ஆவர். ஒரு உண்மையான மூஃமின் ஆகும் முயற்சியில் தன்னை ஆராய்வதன் பக்கமும் கவனம் ஏற்படும். உண்மையான மூஃமினுக்கு தன்னை ஆராய்வதன் பக்கம் கவனம் ஏற்படுவதே, இறைவனது பண்புகளை மேற்கொள்வது மற்றும் அதனை வெளிப்படுத்துவதில் கவனத்தை ஏற்படுத்தும்.

ஆக, மிகப்பெரிய ஒரு பொறுப்பு மூஃமின்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. இந்த இந்த பணிகளைச் செய்ய வேண்டும். ரமலானில் ஏனைய நாட்களை விட உள்ளத்தில் அச்சம் அதிகமாக காணப்படும். மனிதன் சில

சமயம் சுய ஆய்வின் பக்கமும் கவனம் செலுத்துகிறான். மக்கள் இவ்விசயங்களின் பக்கம் கவனம் செலுத்தும்போது, அதாவது இறைவன், ஒரு முஸ்லிமின் மீது, ஒரு உண்மையான மூஃமின் மீது, மனிதன், அடியான் ஆவதற்காக துஆ செய்யக் கூடியவர்களுக்கு, அவன் என்ன அளவை நிர்ணயித்துள்ளான் என்பதைப் பற்றி சிந்திக்கும் போது, பிறகு தூய மாற்றத்தை ஏற்படுத்துவதன் பக்கம் கவனம் ஏற்படும். எப்போதும் இறைவனது இந்த கட்டளைகளைக் கண்முன் நிறுத்த வேண்டும். அதாவது, கபுர மக்தன் இன்தல்லாஹி அன் தகூலூ மாலா தஃப்அலூன் – நீங்கள் செய்யாதவற்றை சொல்வது இறைவனது பார்வையில் மிக்க வெறுக்கத்தக்கதாகும்.

ஆக, இந்நாட்களில் நம்மை ஆராய வேண்டிய அவசியம் உள்ளது. குறிப்பாக ஒவ்வொரு பொறுப்பாளர்களிடமும் இதனை நான் கூறுகின்றேன். கிளை அமைப்புகளில் உள்ளவர்களும், மர்கஸின் பொறுப்பாளர்களும் தன்னை ஆராயுங்கள். வக்ஃபே ஸிந்தகியும் தன்னை ஆராய வேண்டும். பொதுவாக ஒவ்வொரு அஹ்மதியும் தன்னை ஆராய வேண்டும்.

நாம் அறிவுரை வழங்கும்போது தனது வாழ்விலும் அதன் விளைவுகள் தென்பட வேண்டும். இது ஒரு சாதாரண முஸ்லிம் உடைய கடமையென்றால், இது ஒரு சாதாரண மூஃமினின் கடமையென்றால், இதற்காகத்தான் அவன் படைக்கப்பட்டிருக்கின்றான். நன்மையை ஏவ வேண்டும்; தீமையைத் தடுக்க வேண்டும் என்பதற்காக யாரெல்லாம் இந்த பண்பை செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ளார்களோ அவர்கள் மீது எல்லாரையும் விட மிக அதிகமாக செய்ய வேண்டியது கடமையாகும். இந்த கடமை எப்போது முழுமை அடையும் என்றால், நமது நிய்யத் தூய்மையாகவும், அசுத்தமற்றதாகவும் இருக்கும் போது தான் இது முழுமை அடையும். நாம் ஒவ்வொரு கட்டளையின்படியும் அமல் செய்ய முயற்சி செய்யும் போதுதான், பொறுப்பாளர்களின் நிலைமையும் ரமலானில்தான் உயர்ந்திருக்கிறது என்றால், பிறகு மற்ற நாட்களில் அவர்களது சொல்லிலும் செயலிலும் முரண்பாடு கொண்டவர்கள் ஆவர் என்றால் இந்த விசயம் இறைவனுக்கு மிகவும் வெறுக்கத்தக்கது ஆகும்.

நான் பெரும்பாலும் கூட்டங்களில் பொறுப்பாளர்களுக்கு இதனை கவனமூட்டி வருவேன். ஒவ்வொரு நிலையிலும் இருக்கக் கூடிய பொறுப்பாளர்களும், ஒவ்வொரு கிளை அமைப்பின் பொறுப்பாளர்களும் தனது நிலையை மேம்படுத்திக் கொள்ளுங்கள். இவ்வாறு செய்தால் மஸ்ஜிதுகளின் வருகை தற்போதுள்ள வருகையை விட இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாகும். இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது. இதுபோன்று இறைவனது பிற கட்டளைகள் உள்ளன. அதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் போது பல்வேறு பிரச்சனைகள் தானாகவே தீர்ந்து விடும்.

நான் கூறியதுபோன்று பல கட்டளைகள் உள்ளன. அவற்றின்படியும் அமல் செய்வது அவசியமாகும். திருக்குர்ஆனின் கட்டளைகளில் இதுவும் ஒன்றாகும். நீதியை இவ்வாறு நிலைநாட்டுங்கள். தனக்கு எதிராக சாட்சியளிக்க நேர்ந்தாலும், தனது அன்பிற்குரியவர்கள், பெற்றோர்கள், நெருங்கிய உறவினர்களுக்கு எதிராக சாட்சி கூற நேரிட்டாலும் சரியே சாட்சி கூறுங்கள். ஆராய்ந்த பார்த்தால் பொதுவாக அந்த நிலை நம்மிடம் தென்படுவதில்லை. இந்த வகையில் நாம் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான அடையாளத்தை வேண்டுகிறோம். அல்லாஹ்வின் அடியார்களில் இணைவதற்கு விருப்பம் கொண்டுள்ளோம். ஆனால் சாட்சி கூற வேண்டிய, நீதியை நிலைநாட்ட வேண்டிய நேரத்தில் தனது சொந்த பந்தங்களை தண்டனையிலிருந்து எவ்வாறு காப்பாற்றுவது என வழிகளைத் தேட ஆரம்பித்து விடுகின்றனர். இன்னும் சொல்வதாயின் சில சமயங்களில் தானும் தனது சொந்தங்களும் தப்பிப்பதற்கான முயற்சிகள் எடுப்பார்கள். மற்றவர்களை எப்படியாவது குற்றவாளியாக்க முயற்சி செய்வார்கள்.

சில சமயங்களில் பொறுப்பாளர்களைக் குறித்து புகார்களும் வருகின்றன. எனக்கு கடிதம் எழுதுகின்றார்கள். தாங்கள் தான் கவனமூட்டினீர்கள். ஜமாஅத்தில் சில பொறுப்பாளர்களைப் பற்றி இந்த இந்த புகார்கள் உள்ளன அல்லது சில சமயங்களில் ஆண்டு மாநாடுகளில் சில குறைபாடுகளைப் பற்றி சுட்டிக்காட்டப்படுகிறது! சம்பந்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பொறுப்பாளர் அல்லது ஒட்டுமொத்தமாக சீர்திருத்தம் செய்ய சுட்டிக் காட்டப்படும் போது அதனை சீர்திருத்துவதற்குப் பதிலாக இந்த புகாரை யார் செய்தது எனக் தேட

ஆரம்பிக்கிறார். இது அவர்களின் நோக்கமாக இருக்கக் கூடாது. புகார் யார் செய்தார் என்பதைப் பற்றி கேள்வி கேட்கக் கூடாது. இது உங்களது பணி கிடையாது. இந்த குறைபாடு இருக்கிறது என்றால் அதனை களையுங்கள். அவ்வாறில்லையென்றால், பிறகு இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். அல்லாஹ் செய்யாத குற்றத்தின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவானாக! பிறகு சம்பவத்தைப் பற்றிய சரியான அறிக்கை எனக்கு கொடுக்கப்படும். இதற்குப் பிறகு புகார் செய்யக் கூடியவர்க்கு எவ்வாறு பதில் கூற வேண்டும். பதில் கூற வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பது எனது வேலையாகும். பெயரைக் குறிப்பிடாமல் யாராவது புகார் அதற்கு எவ்வித மதிப்பும் கிடையாது. ஜமாஅத்தில் அதற்க நடவடிக்கையும் எடுக்கப்படாது.

எவ்வாறாயினும் பொறுப்பாளர்களிடம், அவர்களது மொழி மற்றும் தனது அமானத்துகளை நிறைவேற்றுவது போன்றவை அல்லாஹ் அவர்களிடம் ஒப்படைத்த பணியாகும். இதனை சரியாக செய்ய வேண்டும். இதனைப் போன்று உண்மையான சாட்சி கூறுவதும் ஆகும். அவர்கள் புகார் அளித்தவரைத் தேடுவதன் பக்கம் கவனம் செலுத்தாமல், சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். புகார் கொடுக்கக் கூடியவரது பெயரை குறிப்பிட வேண்டும் என்றால் நானே கூறி விடுவேன். பெரும்பாலும் நான் கூறித்தான் வந்திருக்கின்றேன். சில சமயங்களில் புகார் கொடுத்தவரை கஷ்டப்படுத்துகின்றனர் என தெரிய வந்துள்ளது. இதுவும் தக்வாவிலிருந்து விலகிய விசயங்களாகும். பிறகு இது அமானத்துகள் மற்றும் பொறுப்புகளை சரியாக நிறைவேற்றுவதாகாது. அல்லாஹ்வுடைய ஹிதாயத் மற்றும் கட்டளைகளின்படியான சரியான அமலும் ஆகாது.

எனவே, இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டுமென்றால் ஒவ்வொரு விசயத்திலும், ஒவ்வொரு நிலையிலும் தன்னை இறைவனது கட்டளைகளின்படி செயல்படுத்துவதற்கு முயற்சி செய்வது அவசியமாகும். வெறும் பொறுப்பாளர்களை மட்டும் நான் கூறவில்லை. ஒவ்வொரு அஹ்மதியும் இந்த விசயத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதாவது இறைவனுடைய அடியார் ஆவதற்கு அனைத்து கட்டளைகளின்படி நடப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். தனது ஈமானை முழுமைப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். தன்னிடத்தில் தன்னடக்கத்தை ஏற்படுத்த வேண்டும். தன்னிடத்திலுள்ள பொறுமை, ஆணவம் போன்ற சிலைகளை உடைத்து விடுங்கள். உண்மையின் உயரிய தரத்தை நிலைநாட்டுங்கள். மன்னிப்பு, சகிப்புத்தன்மை போன்ற பழக்கங்களை ஏற்படுத்துங்கள். புறம் பேசுவதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். அமானத்துகளின் உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்யுங்கள். நீதியை நிலைநாட்டுங்கள். வெறும் நீதியை மட்டும் நிலைநாட்டாதீர்கள். மேலும் அதனை விட கருணை காட்டுங்கள்.

பிறகு ஈதாயிதில் குர்பா அதாவது சொந்தபந்தங்களுக்கு கொடுத்து உதவுங்கள். எந்தவித வெகுமதியின் எதிர்பார்ப்பும் இல்லாமல் தொண்டாற்றுங்கள். தனது சுற்றுப் புறத்தில், சந்திக்கக் கூடியவர்களிடத்தில், தனது அண்டை வீட்டுக்காரர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். இதுவும் இஸ்லாத்தின் மிகவும் முக்கியமான போதனை ஆகும். இது திருக்குர்ஆனின் மிகவும் முக்கியமான போதனையாகும்.

**அண்டை வீட்டுக்காரர்களைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்கூறியுள்ளார்கள்:**

எவ்வாறு அண்டை வீட்டுக்காரருடைய உரிமையை விரிவுபடுத்தினார்களோ அவ்வாறு நாமும் விரிவுபடுத்தினோம் என்றால், பரஸ்பரம் உள்ள மனக்கசப்புகள் நீங்கி விடும். ஒரு வீடல்ல, நூறு வீடுகளல்ல, அடுத்த ஊர் வரை, அடுத்த நாடு வரை விரிந்து கொண்டே செல்லும். ஒருவர் மற்றவருடைய உரிமையை செலுத்துவதற்கு கவனம் ஏற்படும். குற்றம் சுமத்துவதிலிருந்து தவிர்ந்து விடுவீர்கள். புறம் பேசும் பழக்கம் போய் விடும். ஏனென்றால் இதுவும் எவ்வளவு பெரிய தீமை என்றால், இதனை மரணித்த சகோதரனின் இறைச்சியை சாப்பிடுவதுடன் அல்லாஹ் ஒப்புமையாகக் கூறியுள்ளான். எனவே, எவ்வளவு மோசமான செயல், இந்த புறம் பேசும் பழக்கம்! ஆனால் நம்மில் பலர் உள்ளனர். சிந்திக்காமல் புறம் பேசிக் கொண்டே செல்கின்றனர். கவனமூட்டப்பட்ட பிறகு கூறுவார்கள். இந்த விசயங்கள் அவர்களிடம் காணப்படுகிறது என்பார்கள்.

சில கூட்டங்களில், வீடுகளில் உட்கார்ந்து கொண்டு பொறுப்பாளர்களைப் பற்றி பேசப்படுகின்றது. அவர்(களின் பலவீனங்)களைப் பற்றி பேசப்படுகிறது. இந்த செயலும் தவறாகும். இதுவும் புறம் பேசுவதில்

அடங்கும். அப்போது, நாங்கள் கூறுகின்ற இந்த தீமைகள் அவரிடத்தில் காணப்படுகிறது என்பார்கள். நாங்கள் பொய் எதுவும் கூறவில்லை என்றும் கூறுவார்கள்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

உங்களது சகோதரரிடம் ஒரு தீமை இருக்கிறதென்றால், அதனை அவருக்குப் பின்னால் நீங்கள் பேசினால், இது புறம் பேசுதல் ஆகும். ஒருவேளை அந்த தீமைகள் அவரிடம் இல்லாமல் நீங்கள் பேசி வந்தால், அவர் மீது நீங்கள் அவதூறு கூறியுள்ளீர்கள் என்பதாகும்.

எனவே இந்த தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பதும் நற்செயல்களைச் செய்வதும் நமது கடமையாகும். அப்போதுதான் நாம் நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பவர்களுள் ஒருவராக ஆக முடியும். எனவே எப்போதும் இதனை நினைவில் கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் கட்டளைக்கு கட்டுப்படுவது எப்போதும் உண்மையாகும் என்றால், அனைத்து கட்டளைகளின்படி நாம் அமல் செய்யும் போதுதான் அது உண்மையாகும். முதலில் தன்னை சீர்திருத்துங்கள். பிறகு நமது பணியாகிய உலகத்தை சீர்திருத்துவோம். அப்போது தான் நாம் வல் யூமினு பி – என் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என்பதற்கு உரியவர்களாவோம். இல்லையென்றால், நமது ஈமான் முழுமை பெற்றதாகாது. அல்லாஹ் ஃபல் யஸ்தஜீபூலி என்பதற்குப் பிறகு வல் யூமினு பி என்று கூறி இதன் பக்கம் கவனமூட்டியிருக்கின்றான். அதாவது அல்லாஹ்வுடைய கட்டளைகளின்படி அமல் செய்தால், எல்லா விதமான உயர் நல்லொழுக்கங்கள், ஈமானில் முழுமை அடையச் செய்யும். அடியானின் உரிமையை நிறைவேற்றும்.

எனவே, நாம் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி முழுமையாக செயல்பட முயற்சி செய்ய வேண்டும். இந்த ரமலானின் இந்த கடைசி பத்து நாட்களில் உறுதி எடுங்கள். நாம், நமது ஆன்மீக, நல்லொழுக்க நிலையினை உயர் தரம் வரை கொண்டு செல்ல முயற்சி செய்ய வேண்டும். இன்ஷா அல்லாஹ். எந்த அருள்களை நாம் இந்த ரமலானில் பார்த்தோமோ அதனை எப்பொழுதும் நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். முயற்சி செய்து கொண்டே செல்ல வேண்டும். இந்த அருள்மிகு மாதத்தில் எஞ்சியுள்ள சில நாட்களில் இறைவனது கட்டளைகளுக்கேற்ப உண்மையான அடியான் ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். இறை நெருக்கத்திற்கான இந்த முயற்சியை ரமலானிற்குப் பிறகும் கூட தொடர வேண்டும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAITUL FUTUH MOSQUE, LONDON.
**ON 10.08.2012**

Translated by : Maulavi N. ZIYAULHAQ
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456